சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS. 134/2019

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.சித்ரா பென்ஞ் கிளார்க் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அபினாஷ்குமார் | தொழில் | ஆந்திரா வங்கி, ஆரணி கிளை மேலாளர் |
| தந்தை/கணவர் பெயர் | | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

13.03.2023 முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிகிறேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 18.06.2014 தேதியிட்ட கடன் விண்ணப்பம் **வா.சா.ஆ1,** 18.06.2014 தேதியிட்ட சேங்க்ஷன் கடிதம் **வா.சா.ஆ.2,** 18.06.2014 தேதியிட்ட கம்யுனிகேஷன் ஆப் சேங்க்ஷன் **வா.சா.ஆ.3,** 18.06.2014 தேதியிட்ட காம்போசிட் அக்ரிமென்ட் **வா.சா.ஆ.4,** 18.06.2014 தேதியிட்ட கன்சென்ட் கடிதம் **வா.சா.ஆ5,** 18.06.2014 தேதியிட்ட சப்ளிமென்டல் காம்போசிட் அக்ரிமென்ட் **வா.சா.ஆ.6,** 01.03.2017 தேதியிட்ட உயிர்ப்பு கடிதம் **வா.சா.ஆ.7,** வங்கி கணக்கு பட்டியல் **வா.சா.ஆ.8,** 24.02.2014 தேதியிட்ட அசல் கிரய பத்திரம் **வா.சா.ஆ.9,** 11.04.2014 தேதியிட்ட அ- பதிவேட்டு நகல் **வா.சா.ஆ.10,** பட்டா நெம்பர் 206-க்கான 11.04.2014 தேதியிட்ட கணினி சிட்டா **வா.சா.ஆ.11,** 12.04.2014 தேதியிட்ட அடங்கல் நகல் **வா.சா.ஆ.12,** 23.05.2014 தேதியிட்ட பிளான் **வா.சா.ஆ.13,** 29.04.2014 தேதியிட்ட வில்லங்க சான்று **வா.சா.ஆ.14,** 24.07.2014 தேதியிட்ட வில்லங்க சான்று **வா.சா.ஆ.15,** 11.06.2014 தேதியிட்ட மெமோரண்டம் ஆப் டெபாசிட் ஆப் டைட்டில் டீட் **வா.சா.ஆ16,** வங்கி அடையாள அட்டை நகல் **வா.சா.ஆ.17** (அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு நகல் குறியீடு செய்யப்படுகிறது.) தாக்கல் செய்கிறேன். தாவாவில் கோரியுள்ளவாறு தீர்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.